உ

கணபதி துணை.

திருவொற்றியூர்

# தியாகர் வளம்.

இது,

சென்னை,

பழைய வண்ணாரப்பேட்டை

வரகவி,

**பா. மாணிக்க தாஸ பண்டிதர்**

இயற்றி வெளியிடப் பட்டது

நாயனார்பிரஸ்

பழைய வண்ணாரப்பேட்டை

சென்னை.

விலை 1 அணா

உ

கணபதி துணை.

# தியாகர்வளம்.

## சாலைவிநாயகர் வணக்கம்.

சாலை விநாயகரோ இந்த ஏழைகள் மனத்துயரம் நீக்க வருவீர் எமக்காக
சாலை

அன்னை சென்னை மன்னர் மகிழ் சென்னகர செக்குமேட்டில்
சிறப்புடன் அமர்ந்திருக்கும் எங்கள் சாலை விநாயகரே
உமது பாதமலரை ஏழைகள் பணிசெய்ய நேரமில்லை
இந்த பாவிகளைப் பார்க்க இறக்க மில்லையோ (சாலை)

யான் பிறந்தநாளிலிருந்து எனக்கு புத்திதெரிந்த நாள் வரையிலும்
உம்மை மறந்ததில்லை சத்தியம் எப்படியோ உமது கிருபை
ஏழையான் இப்படி யிருக்கின்றேன் எனக்ககப்படவில்லை உத்தியம் (சா)

எங்கள் மெய்யான தெய்வமே இந்த பொய்யான வாழ்க்கையை
விட்டு விலக்குவீரே நாங்கள் பாவி இந்த கரும வலையிற் சிக்கி
இப்போது உமது மரும வழியை நோக்கி இப்படி கலங்குவது
உமக் கழகோ (சாலை)

இறப்பில்லை பிறப்பில்லை வயலிலும் அறப்பில்லை தாயிக்கு ஒரே பிள்ளை
உற்று கேளு என் சொல்லை வீட்டில் அநேக தொல்லை
ஆகையினால் ஆறுவருடம் இந்நாட்டில் இருந்ததில்லை (சாலை)

பிறந்தது பூவிருந்தவல்லி வளர்ந்ததை பாடுவேன் சொல்லி
சென்னை பழையவண்ணாரப்பேட்டை நல்லப்பஉபாத்தியாயர்வீதிதானே
நஉஷாருங்கோ அன்பரே ஒருசமயம் வந்தாவிசாரிங்கோ என் நம்பரே
மாணிக்கதாஸ சீறுன்னரோன்ர்டம்பர் ஈற்பதத்ல் ஈறு பாரு (சாலை)ந

## கஜவரத பெருமாள் வர்ணிப்பு.

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை நல்லப்ப உபாத்தியாயர் வீதி
எங்கள் ஸ்ரீ கஜவரத பெருமாள் கோவில் சோதி

மஞ்சா கருட ஸ்தம்பம் அது இருபதடி கம்பம்
அதில் எழுதியிருக்கும் சிங்கம் அதை உற்றுப் பார்த்தால் தங்கம்

ஆசை நேச பாசமாய் உலாவி
ஐயனுடைய திருவடியை சேவி

மண்டபத்தின் மணத்தைப்பார் அதற் கடுத்தாப்போல் ஒருகிணத்தைபார் சனிக்கிழமை பஜனைசெய்யும் ஜனத்தைப்பார் கனவான்களுடைய குணத்தை பார்

மண்டபத்தில் அமர்ந்திருப்பார் பாரு
ஸ்ரீ கஜவரத ரவருடைய பேரு

கருடாள்வார் முகத்தைப்பார் அங்கே விளக்கெரியும் தகத்தைப் பார்
அடிக்க போகுது காத்து அந்த கதவை சும்மா சாத்து

நமது சாட்சாதி எம்பெருமான் நேரே
அவர் முகத்தை நீ ஏரெடுத்துப் பாரே

கழுத்தில் ஜபமாலை அதைச் சுற்றிலும் ரோஜாவேலை
பணிந்திடுவோம் அவர் காலை வரந் தந்திடுவார் வேளை

சென்னை மன்னவர்கள் மகிழ்ந்திடும் கோவில்
மாணிக்க தாஸன் யான் இருந்திடுவேன் காவல்

உலகில் யாவருக்கும் ஒரே ஈசன்
அந்த ஈசன் மீதே விசுவாசன் மாணிக்க தாசன் (சென்னை)

## திருவொற்றியூர் தியாகராயர் வளம்.

முன்னவரால்புகழ் தன்னைப்பெற்ற திருவொற்றி நகர் வளம் புகழ
நன்னயமாகவே நாளும் என் கரிமுக நாதனடி பணிந்திட நல்ல

வெண் தமிழாம் பண் பாதம் பலவா

செய்ய நான் கேட்டு மெய்பனவே காட்டு
மையனெந்தன் பாட்டு இதில் பொய்யிருந்தால் காட்டு

பட்சமதாய்வந்தோர் நமது பாவம் துலையவே பாரிலிது புண்யஸ்தலமாம் இதில் தட்சணை துவாரகை என்றும் சொல்லும் புராணம் தன்னை கண்டால் பலம் வருமாம்

இதற்கிடு பாரில் ஏது நாடு

பாரும் எந்தன் சொல்லை திருமன தொல்லை
ஆறு மையில் எல்லை நான் வேறு சொல்ல வில்லை

தங்க மயமான செங்கமலர் தம்மை தாளடி பார்த்து நீ தாவி அவள் பங்கய கண்ணி படிதாண்டா பத்தினி பட்சமுடன் பார்த்து நீ சேவி

கனவானே கேள் குணவானே

இருபுரமும் தென்னை மரமதுவும் சொன்னேன்
வருவீரெந்தன் பின்னே தெரு தெருவாய் முன்னே

பற்பல தானியம் பாங்குடனே விற்கும் பாராய் தியாகருடைய வீதி அதை அற்பமாய் எண்ணாதீர் அவனியோர் ஜவுளிவிற்றிடுவோர் அனேக கியாதி

இட்சணமே கண்டு போய் பார் புஷ்ப செண்டு

ஒப்பியே பாரு இதில் தப்பிருந்தால் கூறு
நம் அப்பனேறும் தேரு இப்புவியில் ஜோரு

(முன்னவரால் புகழ்)

தென்னமர சால என் எண்ணமவர் மேலே
நமது சொந்தனமர்ந்தவேளே அது சந்த கடை மூலே

வானோர் மகிழ்ந்திடும் வாலிப ஸ்ரீகளும் வரிசையாய் வருவதை பாரு
வழியெல்லாம் வடைதோசை மோரு கூட வள்ளிக்கிழங்கென்ன ஜோரு

மாணிக்க தாசனுடைய பாட்டு என்னேசரெல்லாம் கேட்டு
அப்புறம் கொடும் நோட்டு கற்பூர கடை காட்டு

நாளும் துதிசெய்யும் நன்னகர் தியாகராஜர் மீதே ஒரு பாட்டு
இதை மிராசுதாரர்களே நீர் கேட்டு அளிப்பீர் ஆனந்தமாய் ஒருநோட்டு
அடியேன் எழுந்து செய்வேன் உமக்கே ஒரு சூட்டு.

## விருத்த நடை.

அவையோரே சபையோரே, சபையிலுள்ள வாலிபரே, எனக்குந்தான் மூத்தவரே, என்னிலும் பெரியவரே, இலக்கணம் உணர்ந்தவரே, பசித்து வந்தவரை, பாது கார்த்து விட்டவரே, களைத்து வந்தவரே, காப்பாற்றி விட்டவரே, தாடி வளர்த்தவரே தலை மொட்டையானவரே, தான தருமம்

செய்தவரே, பேரம் பேத்தி யெடுத்தவரே, பெரியதனம் உள்ளவரே பிரியத்துடன் கேளுங்கோ, யுக்தி வைத்து கேளுங்கோ, உறுக்கத்துடன் கேளுங்கோ, சித்தம்வைத்து கேளுங்கோ, பழைய வண்ணாரப் பேட்டை மாணிக்கம் பாட்டை செவி கொடுத்து கேளுங்கோ. (சிவா)

பாடும்போது பேசாதிங்கோ, பழைய வண்ணாரப் பேட்டை மாணிக்கத்தை பாடவில்லை யென்று வசாதிங்கோ, நானும் ஒருமௌனிங்கோ, அன்பர்களே என் பாடலை செவி கொடுத்து கவுனிங்கோ, நமது ஈசன் செயவிருக்கும்போது மட்ருஸ் வண்ணாரப்பேட்டை மாணிக்க தாசனுடைய

சீடமார்க்கு எல்லாருக்கும் ஒரு குறை ஏது, சொன்னேன் பார் சாது, மனதிலில்லை சூது, இருக்கப் பட்ட பெரியோரே, உங்களுக்கு கேழ்க்க வில்லையா காது, என்னண்டை ஆடாதிங்கோ வாது, நோய் சன்னதிக்கு போரேன் இப்போது.

## விருத்தம்.

ஈசன் அளித்தான் மூன்று கண்ணு, நடுவே நமக்கு சமைக்க கொடுத்தான் ஒரு பெண்ணு, தாசன் மாணிக்கம் சொவ்வதை நீ எண்ணி, எல்லோரையும் மெல்லப் போகுதப்பா இந்த மண்ணு, தெரியாதவன் சேர்த்துவைப்பான் பொன்னு, கவடுயில்லாத வயிற்றுக்கு நீ தின்னு, அல்லும்

பகலும் அவனை தியானம் பண்ணு, அவனே எவனே நமது சிவனே, உன் சம்பாதனையில் சேர்த்துவை மிச்சம், வண்ணாரப்பேட்டை மாணிக்கம் பாடலிலே சொல்லிவந்தேன் சொச்சம், அந்த சொச்சத்தை உன் செவியிலே கேட்டு, மிச்சத்திலே செய்வீரானல் தருமம், இட்சணமே தொலைந்தது உங்கள் கருமம், இவ்வளவுதான் உலகிலுள்ள மருமம், இன்றையோடோ என் சொல்லைக் கேட்டு கிரமம், நம்பினவர்க்கு தெம்பு,

நம்பாதவர்க்கு வம்பு, நம்பாதவன் கொல்லையிலே விளையுமா கம்பு, கிடைக்குமா அவனுக்கு கெம்பு, கெம்பை, விற்றால் பணம், எப்படியிருக்கிறது மாணிக்க தாசனுடைய குணம், சுத்திபாருங்கோ ஜனம், இவன் செத்து போனால் பிணம், உமக்கு எப்படி யிருக்கிறது மனம்.

முன்னேறு போகும்வழி பின்னேறு, முன்னாறு ஓடும்வழி பின்னாறு எங்கள் பட்டணத்தார் மாட்டு மாமிசம் தின்னாறு, நாகப் பட்டணத்தில் மழையில்லை யென்று சொன்னாரு, அத்த கண்டு இடிஞ்சாறு வண்ணாறு, நம் ராவணனே ராமர்தானே கொன்னாறு, இதற்கு யென்ன சொல்வார் மன்னாதி மன்னாரு.

பட்டிகாட்டு நாட்டான், பழைய வண்ணாரப்பேட்டை மாணிக்க தாசனுடைய பாஷை யறியமாட்டான், இவனெல்லாம் சபையிலே ஒரு கூட்டா, இதற்கு ஜவாப்பு சொல்லமாட்டான், ஒரே கேழ்விலே பூட்டான், அவன் கெட்டான் போங்கோ மோட்டான், எதிரே பசை காட்டினா,

வந்துபோன எட்வர்ட் இவங்க பாட்டனா, எப்படிடா உனக்கு பாட்டனென்றால் மிட்டாய் அள்ளி ஊட்டினான், எதுடா இந்த மிட்டாய் யென்றால், இன்னொரு ஆளை சாட்டினான், கேழ்விக்கு உதார்சொல்லாத கிழமூஞ்சி பசங்களே, கேலி பண்ணி காலி பண்ணுங்கோ, இந்த புஸ்தகம் கொண்டுவரும் வண்ணாரப்பேட்டை மாணிக்கத்துக்கு மரியாதையாய் மாலை பண்ணுங்குளே

ம-ா-ா-ஸ்ரீ செல்வநாத முதலியார் அவர்கள் கொத்தவால் சாவடி

ம-ா-ா-ஸ்ரீ கிழங்கு கடை தேவன் இவர்கள் இருவருக்கும் நடந்த

## குதிரைப் பந்தய மெட்டு.

ஆயிரத்து தொளாயிரத்து இருபதாம் வருஷம், அடுத்ததொரு பங்குனி மாதம் பதினோராந்தேதி சொல்லிவரேன் சேதி, உத்து கேளுங்கோ நீதி, பூந்தமல்லி ரோடு, புதிதான தோடு, கேட்டு வாங்கோ என் பாட்டை இப்படி திரும்பிப் பார்த்தேன் ரோட்டை.

கோட்டை யுள்ளே புகுந்து குடித்தேன் கன்டீன் பீரு
அதே ஜோறு நேரு போய்சேர்ந்தேன் ஸ்ரீ பெரம்பத்தூரு

ஸ்ரீ பெரம்பத்தூரு தோடியிலே விட்ட குதிர நம் செல்வநாத முதலி குதிரையும், வடிவேல் முதலியார் குதிரையும் ஒரே படியாய் கிளம்பி வருகுதே கொத்தவால் சாவடி கிழங்குகடை தேவன் வரார் முன்னாலே

எத்திராஜன் வரார் பின்னாலே, மூணு மையில் வித்தியாசம், வந்திருக்கும் பெரியோரே, எப்படி யிருக்குது உங்கள் உத்தேசம்.

தண்டலம் கிட்ட வந்ததே நம் வடிவேல் முதலியார் குதிரை
அவரை ரெண்டோகம் செய்து விட்டதே

இப்போ தாண்டிவிட்டார் எதிராஜன் தங்கி விட்டார் தேவன்
குதிரை வருது பாஸ்டா வழியெல்லாம் நாஷ்டா, ஏகப்பட்ட கலாட்டா
எங்கே பார்த்தாலும் பரோட்டா

நம்போ திருமுச்சி ரோட்டே வந்ததே நம் செல்நாதன் திருட்டுகறுப்பு
திரும்பி திரும்பி பார்க்குதே
பேட்டை நாகாவின் கிட்ட வந்ததே இந்த நாகரீக புரவிக்கு நாகசரமாலே போட்டாரே

இது இரண்டும் வாவில்லே ஜோடா மத்தியஸ்தர் பூட்டிட்டாங்கோ, தங்கத்தினுல் தோடா, கொண்டு போனூர்லாயத்தில் பாடிவரேன் நாயத்தில்
இழைக்கிறூர்கள் சந்தனம், வந்தவர்க்கு வந்தனம்
அடுத்தாப்போல் மடிக்கிறூர்கள் பட்டி,கெலித்த குதிரைக்கு கோதிமாவு ரொட்டி, அதைப் பார்த்து நிற்கிறூர் செட்டி, அப்படியே பாடினேன் கட்டி

இது உத்தி யுள்ள பாட்டு யென்று செட்டியார் யென் கையில் கொடுத்தார் பத்து ரூபா நோட்டு, நோட்டைவாங்கி ரோட்டே வந்தேன், புது புதிதான ஆர்டரு, பூந்தமல்லி ரோட்டிலே ஓடியாருது கூலி மோட்டரு மோட்டாரிலே ஏறி ஆவடி ஸ்டேஷனு அடியேன் பாடின பாஷனு ஈசனுடைய செயல், எனக்கு யேற்றுப்போல் நிற்குது பார் மெயில், மெயிலிலே நான் பயில், நானில்லாங்கோ பெயில்.

அதுவே ஜோக்கு திருவாவந்தேன், பேட்டை யென்றால் பேட்டை பேருபோன பேட்டை, பழைய வண்ணாரப்பேட்டை வந்து பாருங்கோ ரோட்டை, ரோடு யிருக்கிற நீட்டை கேட்டு பாருங்கோ பீட்டை, படித்து பாருங்கோ போர்டை, சோத்துகை வாட்டை அவனே இவனே போல போடமாட்டேன் மூட்டை, ஆறுவயது குழைந்தையிலிருந்து ஆடிவரேன் வேட்டை, அன்பரே தயவு செய்து கண்டு கொள்ளுங்கோ வீட்டை, வண்ணாரப்பேட்டைபஜாறு வந்தஜன உஜாறு, கஜவாத கோவிலு

அவர் கால்மாட்டில் நான் காவலு, இப்படி பாட்டு மெட்டு பாடுகிறேனென்று எத்தனையோ பேரு வைத்துபார்த்தார் ஏவலு, என்னை பெற்ற தாயாறு உளவாளி அதற்கு சுத்தி விட்டாள் ஒரு சாவலு, சாவலுக்கு ஜோடாவாரு சோதா கில்லேடி, இந்த சவாலுக்கு ஈடாவாரு, அவனைப்

போல சோதா கில்லேடி ஆயிரம்பேர் என் பகலிலே அளக்கவந்தா புகல்லே எண்ணெயில்லே அகல்லே திரிபோட்டா சுகமில்லே, எண்ணெயில்லாத வெளக்கெரியுமா என்னைப்பெற்றவரே வண்ணாரப்பேட்டை மாணிக்க நான் என்ன சொன்னாலும் தனக்குறைபுமா அயிசாலங்டி மெட்டுக்காரங்கோ மாணிக்கம் பைசா அகல பொட்டுக்காரனுங்கோ, பைராக்கி பொட்டு காரனய்யா மெட்ராஸ் வண்ணார்ப்பேட்டை மாணிக்க வைராக்ய மெட்டுகாரனய்யா, பிறைவைத்த ஜிப்பாகாரன்கோ, ஸ்ரீ தியாகராஜர் மேலேகுறை வைத்து பாடமாட்டேனுங்கோ.

தாலிம்கான் சிங்காரம்.

சின்ன பெண்ணே நீலவர்ணமே பழைய வண்ணாரப் பேட்டை
தாலீம் மக்கான் சிங்காரம் சொல்லிவரேன் கேள்.
ஊசி முனையில் நில்லு உல்டாசி நா பல்டிபோடு
ஜம்மனடித்து காட்டு சக்கர் வாங்கடி சிங்கக் குட்டி (சின்ன)
மல்கம்பம் மீதிலேறி மானே நீ செய் சவாரி
குல்காம் குஸ்திகாரி ஈரானி பஞ்சர் போட்ரி ஜானி
கட்டாரி பாலா யெடு கண்ணே சுல்தான் தொடு
சுல்தான்லே ஒருளெடுத்து ஜோடி கட்டி முன்னே நில்லு (சின்ன)
சீதா கோதாவைவிட்டு ஜிலு ஜிலென்று செம்மண்ணை கொட்டி
தண்டால் எடுத்துக்காட்டு சக்கர் வாங்கடி சிங்கக் குட்டி
கம்பர்பட்டியை ஒட்டுகண்ணே நீ தம்முகட்டு
பின்னால் வந்து விடுகட்டு என் முன்னே நின்று முண்டா தட்டு
(சின்ன பெண்ணே)
பட்டா பாங்கி ஜோடி பாண செடிகள் குச்சி
கட்டாரி பாலா எடு கண்ணே நின்று போடு போடு
காவிலங் கோட்டா கட்டு கண்ணுக்கு நீ மையு மிட்டு
நெற்றியிலே ஒரு பொட்டு மிட்டு நின்ற விடத்தில் சமுக்குகாட்டு
(சின்ன பெண்ணே)
மஞ்சள் ஜட்டியை மாட்டு மக்மல் லங்கோட்டா கட்டு
மண்டி ஒன்று போட்டு காட்டு மன்னவர்க்கு ஒரு சலாம் கூட்டு
அபரஞ்சி பொட்டு விட்டு அன்னகொப்பு முருகுமாட்டு
தினுசாலே ஒரு நடைநடந்து குனுசாவாடி என்பின் தொடர்ந்து
(சின்ன பெண்ணே)
மாணிக்கத்தை மனதில் எண்ணு மவுலாவுக்கு ஒரு சலாம் பண்ணு
பூமியிலே கையை ஊனு பெண்ணே சர்க்கரை தின்னு தின்னு
(சின்ன பெண்ணே)